டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண் ஜுவல்லர்ஸ்
agridoctor.in | 10.02.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 191 - Madurai | Online Edition

# 2024-25-ம் நிதியாண்டில் மீன் உற்பத்தி 197 லட்சம் டன்னாக அதிகரித்தது

புது தில்லி, பிப்.9

இந்தியா உலகின் இரண்டாவது மிகப் பெரிய மீன் உற்பத்தி யாளராகவும், பெரிய கடல்வாழ் உயிரின உற்பத்தியாளராகவும் திகழ்கிறது.

உலகளாவிய மீன் உற்பத்தியில் இந்தியா சுமார் 8 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ளது.

11,099 கிமீ தொலைவிற்கு கடலோரப் பகுதிகளையும் ஆறுகள், நீர்நிலைகள், ஈர நிலங்கள், மீன் வளர்ப்பு போன்ற நாட்டின் செழுமையான கட்டமைப்புகளைக் கொண்டுள்ள இந்தியா, 3 கோடி பேரின் வாழ்வாதாரங்களுக்கு வழிவகுக்கிறது. அத்துடன் அந்நியச் செலாவணியை ஈட்டுவதில் பெரும் பங்களிக்கிறது. கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மீன்வளத்துறை சிறந்த வளர்ச்சியைக் கண்டுள்ளது.

2024-25-ம் நிதியாண்டில் மீன் உற்பத்தி இதுவரை இல்லாத அளவாக 197 லட்சம் டன்னாக இரட்டிப்பாக அதிகரித்தது. இது 2013-14-ம் நிதியாண்டில் 95.79 லட்சம் டன்னாக இருந்தது. பொருளாதார ரீதியாக மீன் வளர்ப்புத்துறை அந்நியச் செலாவணியை ஈட்டுவதில் மிகப்பெரிய பங்களிப்பைக் கொண்டுள்ளது.

2024-25-ம் நிதியாண்டில் ரூ.62,408 கோடி அளவிற்கு மீன் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதில் இறால் வகை முக்கியப் பொருளாகும்.

இதற்கு அமெரிக்கா, சீனா, ஆகிய நாடுகள் முக்கிய சந்தைகளாக விளங்குகிறது.

# மண்ணை நேசித்த மாண்பாளர்கள் நினைவு விழா



மதுரை, பிப்.9

மதுரை மாவட்டம், மேலவளவில் இந்த மண்ணை நேசித்த மாண்பாளர்கள் நினைவு விழா நடந்தது.

இன்று வையை, மேலவளவு உழவர் உற்பத்தியாளர் குழு மற்றும் மேலவளவு உயிரியல் காரணிகள் உற்பத்தி மையம் இணைந்து இந்த மண்ணை நேசித்த மாண்பாளர்கள் நினைவு விழா மேலவளவு பெரிய ஊரணி ஆலமரத்தடி இயற்கைச் சூழலில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வு கர்னல் பென்னிகுயிக், இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் மற்றும் பேராசிரியர் மாதவ் காட்கில் ஆகியோரின் நினைவாக ஏற்பாடு செய்யப்பட்டது. இயற்கை, நீர், மண் மற்றும் மக்கள் நலனுக்காக தங்கள் வாழ்வை அர்ப்பணித்த மூன்று பெரும் சிந்தனையாளர்களை நினைவு கூரும் வகையில் இந்த விழா அமைந்தது.

நிகழ்வில் மேலவளவு உயிரியல் காரணிகள் உற்பத்தி மையத்தின் பவானி வரவேற்புரை வழங்கினார். முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் தங்கம் மலைச்சாமி முன்னிலை யிலும், விதை நெல் காப்பாளர் கருணாகர சேதுபதி, வையை ஒருங்கிணைப்பாளர் தலைமையிலும் நிகழ்வு நடைபெற்றது. வாழ்த்துரையை சென்னை கிறிஸ்துவக் கல்லூரி, தாவரவியல் துறை பேராசிரியர் லெஸ்லி லாரன்ஸ் வழங்கினார்.

திரைப்பட நடிகர் தாமிரபரணி மதியழகன் வழங்கிய கலை நிகழ்ச்சி, விதையின் அவசியத்தையும் இயற்கை வேளாண்மை யின் முக்கியத்துவத்தையும் உணர்த்தும் வகையில் திருவள்ளுவர்

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

உள்ளிட்ட பல்வேறு வேடங்களில் இடம்பெற்று, நிகழ்ச்சியின் சிறப்பாக அமைந்தது.

சிறப்பு விருந்தினர்களாக நரசிம்மன் (சென்னை கிறிஸ்துவக் கல்லூரி, தாவரவியல் துறை), ஸிமி ளீலியி சத்தியமூர்த்தி (ஓய்வு), இந்திய ராணுவம், குறிஞ்சி குமரன், பெரியார் ஒருபோக சங்கம், தினகரன் (ஓய்வு), விலங்கியல் துறை, மதுரா கல்லூரி ஆகியோர் கலந்து கொண்டு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பருவ–நிலை மாற்றம் மற்றும் கர்னல் பென்னிகுயிக், இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார், பேராசிரியர் மாதவ் காட்கில் ஆகியோரின் சமூக அர்ப்பணிப்புகளை எடுத்துரைத்தனர்.

நிகழ்வின் ஒரு பகுதியாக, ஊரணிக் கரையில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் மூலம் மரக்கன்றுகள் நடப்பட்டு, இயற்கை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும், நாட்டு ரக கத்தரிக்காய் வகைகள் காட்சிப்படுத்தப்பட்டு, பாரம்பரிய விதைகள், உயிரியல் மற்றும் பசுமை குறித்து விளக்கப்பட்டது.

இந்த விழாவில் மதுரை சுற்றுவட்டார இயற்கை விவசாயிகள், மதுரை வேளாண் கல்லூரி மாணவர்கள், சேது பாஸ்கரா கல்லூரி மாணவர்கள், அரசுப் பள்ளி மாணவர்கள் மற்றும் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

நிகழ்வின் இறுதியில் அப்துல் ரகுமான் நன்றி உரை வழங்கினார்.

பாரம்பரிய நெல் ரகங்களின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில், செந்நெல் என அழைக்கப்படும் தில்லை நாயகம் நெல் கொண்டு உணவு திருவிழாவும் நிகழ்வின் ஒரு பகுதியாக சிறப்பாக நடைபெற்றது.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# பாரம்பரிய மற்றும் உழவர்களின் இரகங்கள் பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சி 12ம் தேதி நடக்கிறது

கோயம்புத்தூர், பிப்.9

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் விதை அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை, விதை மையம் சார்பில் பயிர் இரகங்கள் மற்றும் உழவர்களின் உரிமைகள் பாதுகாப்பு சட்டம் (PPV&FRA), 2001 இன் கீழ் 'பாரம்பரிய மற்றும் உழவர்களின் இரகங்கள் பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சி' குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 12.2.26 அன்று கருத்தரங்கம் நடத்தப்படவுள்ளது. அதில் 100 விவசாயிகளுக்கு இப்பயிற்சியானது வழங்கப்பட உள்ளது. இப்பயிற்சியில் பாரம்பரிய விதைகளை சட்டபூர்வமாக பாதுகாப்பது, புதிய இரகங்கள் பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் விவசாயிகளின் உரிமைகளை பற்றி வல்லுநர்களால் விளக்கம் அளிக்கப்படும். மேலும், புதிய பயிர் வகைகளின் பதிவு முறை மற்றும் விவசாயிகளின் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் இழப்பீடு மற்றும் பலன்களை பற்றி தெரிவிக்கப்படும்.

இந்த பயிற்சி மூலம் உங்களது உழவர் உரிமைகளை குறித்து தெளிவு பெற்று எதிர்காலத்தில் தங்களது பயிர் வகைகளை பதிவு செய்து சட்டப்பூர்வ பாதுகாப்பு பெற்று பயனடைவீர்கள். ஆகையால், விருப்பமுள்ள விவசாயிகள் இப்பயிற்சியில் கலந்து கொள்ள தங்களின் பெயரை முன்பதிவு செய்து கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

விழிப்புணர்வு கூட்டத்தில் பங்கேற்க விரும்பும் விவசாயிகள் 80121 26747, 73732 59885 என்ற அலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு பெயரை முன்பதிவு செய்து கொள்ளவும்.










**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.

இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

**நன்றி**

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

# காஞ்சிபுரம் விதைப்பரிசோதனை நிலையத்திற்கு அங்கீகாரம்

காஞ்சிபுரம், பிப்.9

தமிழ்நாடு விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு துறையின் கீழ், விதையின் தரத்தை உறுதி செய்ய மாநில அளவில் 30 விதைப்பரிசோதனை நிலையங்களும், ஒரு டிஎன்ஏ ஆய்வகம், ஒரு ஒப்பீட்டு விதை மாதிரி ஆய்வகம், ஒரு இன பரிசோதனை ஆய்வகம் மற்றும் ஒரு பிடி பருத்தி விதை தூய்மை ஆய்வகம் செயல்பட்டு வருகிறது. இதில் காஞ்சிபுரத்தில் செயல்பட்டுவரும் விதைப்பரிசோதனை நிலையமும் ஒன்றாகும். காஞ்சிபுரம் விதைப் பரிசோதனை நிலையம் விவசாயிகளுக்கு தரமான சான்றளிக்கப் பட்ட விதைகள் கிடைப்பதை உறுதி செய்வதில் முக்கிய பங்கு வகிக் கிறது. இப்பரிசோதனை நிலையத்தில் இப்பகுதியில் பயிரிடப் படும் முக்கியப் பயிர்களான நெல், பயறு வகைகள், எள், நிலக்கடலை, பருத்தி, மக்காச்சோளம் மற்றும் காய்கறி விதைகள் ஆகியவற்றில் விதைப்பரிசோதனைகளை மேற்கொண்டு வருகிறது. இப்பயிர் களின் ரகங்களில் முளைப்புத்திறன், ஈரப்பதம், புறத்தூய்மை மற்றும் பிறரக கலப்பு போன்ற பரிசோதனைகளை பகுப்பாய்வு செய்து முடிவுகள் வெளியிட்ட பிறகே விதைகளாக விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இதனால் விவசாயிகளுக்கு தரமான விதைகள் கிடைப்பதுடன், குறைந்த உற்பத்தி செலவில் கூடுதல் மகசூல் கிடைப் பது சாத்தியமாகிறது. இப்பரிசோதனை நிலையத்தில் நடப்பாண்டில் இதுவரை பெறப்பட்ட 2046 விதை மாதிரிகள் விதைப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு ஆய்வு செய்யபட்டத்தில் 120 விதை மாதிரிகள் தரமற்றது என உறுதி செய்யப்பட்டது.

காஞ்சிபுரம் விதைப்பரிசோதனை நிலையத்திற்கு இந்தியாவில் செயல்படும் விதைப்பரிசோதனை நிலையங்களுக்கு இணையாக விதைப்பரிசோதனை முறைகள் உறுதி செய்யப்பட்டு சோதனை மற்றும் அளவு திருத்த ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரி யத்தின் (NABL) தரச்சான்று பெறப்பட்டுள்ளது. இதனால் இப்பரி சோதனை நிலையத்தில் பகுப்பாய்வு செய்து முடிவுகள் வெளியிடப் படும் விதைகளுக்கு இந்தியளவில், இப்பரிசோதனை நிலையத்திற்கு அங்கீகாரம் கிடைக்கப்பெறுகிறது. மேலும், விதைப்பரிசோதனை செய்து கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு நம்பகத்தன்மையும், திருப்தியும் கிடைக்கப் பெறுகிறது. எனவே விதை உற்பத்தியாளர் களும், விதை விற்பனையாளர்களும், விவசாயிகளும் தங்களது விதை ரகங்களை காஞ்சிபுரம் விதைப் பரிசோதனை நிலையத்தில் ஆய்வு செய்து பயன்பெறலாம் என காஞ்சிபுரம் விதைப் பரிசோதனை அலுவலர் பெ.ராஜகிரி தெரிவித்துள்ளார்.

# Rithvik Pipe

IS 4985 : 2021 IS 9537

## 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




### பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# அறிவியல் ஆலோசனைக் குழு கூட்டம் நடைபெற்றது




புதுக்கோட்டை, பிப்.9

புதுக்கோட்டை மாவட்டம், வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் 5.2.26 அன்று 17-வது அறிவியல் ஆலோசனைக் குழு கூட்டம் நடைபெற்றது. திட்டஒருங்கிணைப்பாளர் முனைவர் ம.தமிழ்ச்செல்வன் துவக்கி வைத்து வரவேற்புரையாற்றினார். பின்பு 16வது அறிவியல் ஆலோசனைக் குழு கூட்ட பரிந்துரைகளுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் 2025 ஆம் ஆண்டின் நிலைய செயல்பாடுகள் பற்றி எடுத்துரைத்தார். முனைவர் பி.பொ.முருகன், விரிவாக்க கல்வி இயக்குநர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் ஹைதராபாத்திலுள்ள வேளாண்மை தொழில் நுட்ப பயன்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகம முதன்மை விஞ்ஞானி முனைவர் ஆ.பாஸ்கரன், ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் முனைவர் இர.தமிழ்வேந்தன் மற்றும் முனைவர் சு.செல்வம், முதன்மையர், வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், குடுமியான் மலை ஆகியோர் அடுத்த ஆண்டின் அறிவியல் நிலைய செயல் பாடுகளுக்கான கருத்துக்களை அறிவித்தனர். சகோதர துறை களான வேளாண்மை துறை புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் மு.சங்கரலட்சுமி மற்றும் தோட்டக்கலை துறை, கால்நடைத்துறை, மீன் வளத்துறை, வனத்துறை, வேளாண் பொறியியல் துறைகளைச் சார்ந்த அதிகாரிகள், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், தஞ்சாவூர், இந்திய உணவு பதப்படுத்தும் தொழில்நுட்ப நிறுவனம், தஞ்சாவூர், அகில இந்திய வானொலி நிலையம், திருச்சி ஆகியவற்றின் அதிகாரிகள் மற்றும் முன்னோடி வங்கி மேலாளர் அறிவியல் நிலைய பணித்திட்டங்களுக்கான ஆலோசனைகளை வழங்கினர். இக்குழுவின் முன்னோடி விவசாய உறுப்பினர்கள் வேளாண் அறிவியல் நிலையத்தின் முன்னேற்ற பணிகளுக்கான பரிந்துரைகளை வழங்கினர்.

நிலைய விஞ்ஞானிகளின் தொழில்நுட்ப மடிப்பிதழ்கள் வெளியிடப்பட்டன. ஆடுகள், தென்னங்கன்றுகள் மற்றும் உணவுபதப்படுத்துதலுக்கான உப கரணங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. விவசாயிகளின் உற்பத்தி பொருட்கள் கண்காட்சி அமைக்கப்பட்டது. நிலைய தொழில்நுட்ப வல்லுநர்கள் முனைவர் செ.ஜேசுப் பிரியா பூர்ணகலா, முனைவர் வ.ப.ராகவேந்திரன், முனைவர் செந்தில் ஆகியோர் நிகழ்ச்சிகளை நடத்தினர். தொழில்நுட்ப உதவியாளர்கள் கருப்பசாமி, அமுல்ராஜ் மற்றும் தினகரன் நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்தனர். நிகழ்ச்சியின் நிறைவாக முனைவர் ஜெ.பாலமுருகன் நன்றி கூறினார்.



# மாசிப்பட்ட எள் பயிரில் அதிக மகசூல் பெற விதை தரம் அறிந்து விதைப்பு செய்ய வேண்டும்!



புதுக்கோட்டை, பிப்.9

இந்தியாவில் சாகுபடி செய்யப்படும் எண்ணெய் வித்துப் பயிர்களில் முக்கியமான பயிராக எள் விளங்குகிறது. எள் விதைகளில் 50 சதவீதம் எண்ணெய் மற்றும் 18-20 சதவீதம் புரதச்சத்து உள்ளது. சுமார் 73 சதவீதம் சமையல் எண்ணெயாகவும் 4.2 சதவீதம் தொழிற்சாலைகளில் பெயிண்ட் மருந்து தயாரிக்கவும் பயன்படுகிறது. வெள்ளை எள் பேக்கரி பொருட்கள் தயாரிக்கவும், கருப்பு எள் மருத்துவ பயன்பாட்டிற்கும் உதவுகிறது. எள் புண்ணாக்கு கறவை மாடுகளுக்கு சிறந்த தீவனமாகவும், உர மாகவும் பயன்படுகிறது. எள் புண்ணாக்கில் 6.0-6.2 சதவீதம் தழைச்சத்தும் 2.0-2.2 சதவீதம் மணிச்சத்தும் மற்றும் 1.0-1.2 சதவீதம் சாம்பல்சத்தும் உள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் நெல் அறுவடைக்குப்பின் மாசிப் பட்டத்தில் எள் விதைப்பு பணி துவங்கப்பட உள்ளது. அதிக மகசூல் பெற தரமான விதைகளைப் பயன்படுத்துவதன் மூலம் குறைந்த விதை அளவு, சீரான மற்றும் வேகமான முளைப்புத்திறன், சீரான பயிர் எண்ணிக்கை, ஒருமித்த பூக்கும் தன்மை, சீரான முதிர்ச்சிப் பருவம், குறைவான பூச்சி மற்றும் நோய் தாக்குதல் மற்றும் 15 முதல் 20% வரை அதிக விளைச்சல் ஆகிய நன்மையைப் பெறலாம்.

விவசாயிகள் தங்களது கைவசம் உள்ள எள் விதைகளை விதைக்கும் சூழ்நிலையில் விதைக்க உள்ள விதையில் முளைப்புத் திறன் குறைந்தபட்சம் 80 விழுக்காடு, புறத்தூய்மை 97 விழுக்காடு, அதிகபட்ச ஈரப்பதம் 9 விழுக்காடுக்குள் உள்ளதா? என்பதை அறிந்து விதைப்பு செய்தால் எள் சாகுபடியில் அதிக மகசூல் பெற வாய்ப்பு உள்ளது. எனவே விவசாயிகள் தங்களது கைவசமுள்ள எள் விதை களின் முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம் மற்றும் பிற ரகக் கலவன் பிற பயிர் விதை அளவு அறிய புதுக்கோட்டை மாவட்டத் திலுள்ள நம்பர் 30, இராமலிங்கம் தெரு, திருக்கோகர்ணம் 622 002, என்ற முகவரியில் செயல்பட்டு வரும் விதைப்பரிசோதனை நிலையத்தில் எள் விதையில் குவியலுக்கு ஒரு விதை மாதிரி வீதம் 25 கிராம் என்றளவில் விதை மாதிரி எடுத்து துணிப்பையினுள் இட்டு கட்டி பையினுள் முகவரி ரகம் மற்றும் தேவையான பரிசோதனை விபரங்களை குறிப்பிட்ட விபரத்தாள் வைக்கப்பட வேண்டும்.

மேலும் ஈரப்பதம் அறிய தனியே 50 கிராம் அளவு விதைகளை காற்று புகாத பாலிதீன் பைகளில் இட்டு பயிர் இரகம் தேவையான ஆய்வு விபரங்களை குறிப்பிட்டு மாதிரிகளைக் கொடுத்துமாதிரிக்கு ரூ.80/- மட்டும் செலுத்தி விதைகளை பரிசோதனை செய்து கொள்ளலாம். பரிசோதனை முடிவுகளை உங்கள் இருப்பிட முகவரிக்கே அனுப்பி வைக்கப் படும் என புதுக்கோட்டை விதை பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் செ.சுமித்ராதேவி மற்றும் வேளாண்மை அலுவலர் மா.செல்வம் ஆகியோர் கேட்டுக் கொண்டனர்.

# தென்னை டானிக் குறித்து விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



ஈரோடு, பிப்.9

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தை சேர்ந்த இறுதி ஆண்டு பயிலும் மாணவிகள் ஊரக வேளாண் பணி அனுபவப் பயிற்சியின் கீழ் ஈரோடு மாவட்டம், நம்பியூர் ஊராட்சியில் தங்கி சுற்றியுள்ள கிராமப்புறங்களுக்கு சென்று விவசாயிகளுடன் இணைந்து கற்றல் கற்பித்தலில் ஈடுபட்டு வருகின்றனர்.

தென்னையின் மகசூலை 20 சதவீதம் வரை உயர்த்தும் தென்னை டானிக் பற்றி குருமந்தூர் பகுதியை சேர்ந்த 25க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இலை களில் பச்சையத்தை அதிகரித்து, ஒளிச்சேர்க்கையைத் தூண்டி, குரும்பைகள் உதிர்வதைக் குறைத்து, காய்களின் எண்ணிக்கை யையும், அளவையும் அதிகரித்து, மேலும் பூச்சி, நோய் எதிர்ப்பு சக்தியையும் தருகிறது.

இது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட ஒரு ஊட்டச்சத்து கரைசல் ஆகும். இதை ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வேர் மூலம் கொடுக்க வேண்டும் ஒரு மரத்திற்கு 200 மி. லி என இம்மாணவிகள், சௌமியா, சௌந்தர்யா, ஸ்ரீ அஷ்விதா, ஸ்ரீநித்யா, சுபஸ்ரீ.ச, சுபஸ்ரீ செ.ஜா, சுதர்ஷினி,சுகி, சுஜாதா, சுஜித்தா ஆகியவர்கள் விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளித்தனர்.

# நீரில் கரையும் உரங்கள் - ஒரு பார்வை




அது என்ன? நீரில் கரையும் உரங்கள் (WATER SOLUBLE FERTILIZERS) எல்லா உரங்களும் நீரில் கரையாதா? என நீங்க கேட்பது என் காதில் கேட்கிறது. அதைபற்றி விரிவாக பார்ப்போம்.

**நீரில் கரையும் உரங்கள் (WSF)**

இவை தண்ணீரில் முழுமையாகக் கரைந்து (100%) சொட்டுநீர் பாசனம் (FERTIGATION ) மூலமாக தோட்டக்கலை பயிர்கள், வணிக பயிர்களுக்கு நேரடியாக சொட்டுநீர் பாசனத்துடன் விரைந்து வழங்க முடியும். இவை நீரில் கரைவதால் சில நேரங்களில் பயிர்களின் வளர்ச்சியை துரிதப்படுத்த இலைவழி தெளிப்பாக ( FOLIAR SPRAY) செய்யவும் பயன்படுகிறது.

**நீரில் கரையும் உரங்களுக்கும் மற்ற உரங்களுக்கும் உள்ள வேறுபாடு என்ன?**

நீரில் கரையும் உரங்களை பயிர்கள் விரைவாக எடுத்துக் கொள்ளுவதுடன் உரம் விரயமாவது தடுக்கப்படுகிறது. கிட்டத்தட்ட 80-85% உர சத்துகளை பயிர்கள் எடுத்துக்கொள்ளுவதால் மகசூல் 30-40% அதிகரிக்க வாய்ப்புள்ளது. ஆனால் நேரடியாக மண்ணில் இடும் உரங்களை பயிர்கள் எடுத்துக்கொள்ளக்கூடிய திறன் மிகவும் குறைவு. எடுத்துக்காட்டாக பயிர்கள் தழை சத்தை (N) 30-40%, மணிசத்தை (P) 15-20% யும் சாம்பல் சத்தை (K) 55-60% யும் எடுத்துக் கொள்ளுகின்றன. மீதமுள்ள உர சத்துகள் காற்றில் மண்ணில் கரையாமல் விரயமாவதுடன் மண்வளமும் சுற்றுப்புற சூழலும் பாதிக்கப்படுகின்றன.

**நீரில் கரையக்கூடிய உரங்கள் என்னென்ன? தெரியுமா?**

**1) காம்ப்ளக்ஸ் உரங்கள் (NPK).**

19:19:19, 20:20:20 மற்றும் ( TNAU 19:19:19) பயிர்களின் ஆரம்ப வளர்ச்சி மற்ற படி அனைத்து பயிர் நிலைக்கும் ஏற்ற உரமாகும்.

**2) மோனோ அம்மோனியம் பாஸ்பேட் (MAP) 12:61:0**

இது வேர் வளர்ச்சி மற்றும் பூக்கும் நிலையில் தெளிக்க எற்றது அதிக அளவாக உள்ள (PH) மண்ணுக்கு ஏற்றது.

**3) டை அம்மோனியம் பாஸ்பேட் (D.A.P)**

இது நீரில் கரைந்து பயறுவகை பயிர்களுக்கு இலைவழியாக தெளிப்பதால் மகசூல் அதிகரிக்கும்.

**4) பொட்டாசியம் நைட்ரேட் (13:0:45)**

இது காய் பழம் பிடிக்கும் நிலை மற்றும் பழங்களின் தரத்தை உயர்த்த பயன்படுத்தப்படுகிறது.

5) சல்பேட் ஆப் பொட்டாஷ் (0:0:50) பயிர்களுக்கு ஏற்றது.

6) கால்சியம் நைட்ரேட் (நைட்ரஜன் 15.5%) கால்சியம் 18.8%) செடிகளின் வளர்ச்சிக்கும் பழங்களின் தரத்திற்கும் அவசியம்.

**7) யூரியா- 46% ஹி**

வளர்ச்சி குன்றிய பயிர்களுக்கு இலைவழியாக தெளிக்க பயன்படுத்தப்படுகிறது.

**பயன்படுத்தும் முறை?**

இவற்றைத் தண்ணீரில் கலந்து கரைசலாக மாற்றி சொட்டுநீர் பாசனம் அல்லது இலைவழியாக தெளிப்பாக (FOLIAR SPRAY) பயன்படுத்தலாம்.

**நீரில் கரையக்கூடிய உரங்களை பயன்படுத்துவதால் உண்டாகும் நன்மைகள்?**

1) உடனடியாக பயிர்களுக்கு ஊட்டசத்து கிடைக்கிறது (நமக்கு குளுக்கோஸ் ஏற்றுவது போல) இலைவழியாக தெளிப்பால் உடனடியாக சத்துகள் கிடைக்கிறது.

2) உரங்களின் பயன்பாடும் கணிசமாக குறையும்.

3)அதிக மகசூல் – துல்லியமான ஊட்டச்சத்து மேலாண்மையால் பயிர் வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.

4) சுற்றுப்புற சூழலுக்கேற்றது.

**கிடைக்குமிடங்கள்**

அனைத்து உரக்கடைகளில் எளிதாக வாங்கி பயன்படுத்தலாம். ஒரு லிட்டர் நீருக்கு 3-5 கிராம் என்ற அளவில் இலைவழியாக தெளிக்கலாம். ஆன்லைனில் பெற (tnau.agricart.Com) மூலமாக TNAU 19:.19:19 உரத்தை பெறலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# தூய்மையான முறையில் பட்டுப்புழு வளர்ப்பு குறித்து விளக்கமளித்த பட்டுப்புழுவியல் மாணவர்கள்



கோயம்புத்தூர், பிப்.9

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மேட்டுப்பாளையம், பட்டுப்புழுவியல் துறையில் இளம் அறிவியல் (மேதமை) பட்டுப் புழுவியல் நான்காம் ஆண்டு மாணவர்கள் தி.அப்துஸ் ஸலாம், மு.பாரிவேல், ப.தருண் பிரசன்னா, ச.தினேஷ் குமார், க.கோகுல், த.இந்து பிரகாஷ் மற்றும் ர.ஜனார்தனன் ஆகியோர் ஊரக பட்டுப்புழுவியல் பணி அனுபவத்திட்டத்தின் (யூறீநிசி) கீழ் இரண்டு மாத காலம் ஓசூர் பகுதியில் உள்ள பட்டு வளர்ச்சித் துறையில் பயிற்சி திட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஓசூர் பகுதியில் உள்ள பட்டுப்புழு வளர்ப்பு விவசாயிகளை சந்தித்தல், பட்டு வளர்ப்பு தொழில்நுட்பங்களை செயல்முறை விளக்கம் அளித்தல், பட்டு வளர்ச்சித்துறை அலுவலகங்களுக்கு சென்று அங்கு நடக்கும் செயல்பாடுகளில் பங்கேற்று கற்றறிதல், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் (ய்ணுநுவி) மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் (ஹிறூநுவி) செயல்பாடுகளில் பங்கேற்றல் முதலிய பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக ஓசூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள பட்டுப்புழு விவசாயிகளை சந்தித்தனர். பட்டு வளர்ச்சித் துறையின் உதவி இயக்குநர் அப்துல் ஃபரூக், ழிகாட்டுதலின் கீழ் உத்தனப்பள்ளி, தேன்துர்கம், பு.சாமணப்பள்ளி, அந்திவாடி, கோட்டன்கிரி, அத்திமுகம், பாகலூர், ஈச்சங்கூர், கூலிங்கணப்பள்ளி, பேரிகை மற்றும் அச்செட்டிபள்ளி முதலிய பகுதிகளில் உள்ள பட்டு வளர்ப்பு விவசாயிகளை சந்தித்தனர்.

மேலும் தூய்மையான முறையில், எந்தவித நோய் பாதிப்புமின்றி பட்டுப்புழு வளர்ப்பு குறித்து விவசாயிகளுக்கு மாணவர்கள் விளக்கம் அளித்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# பசுந்தாள் உரப்பயிர்களின் விதைகளை பகுப்பாய்வு செய்த பின் விற்பனை செய்யுங்கள்

கடலூர், பிப்.9

விதை விற்பனையாளர்கள் பசுந்தாள் உரப்பயிர்களின் விதைகளை பகுப்பாய்வு செய்த பின் விற்பனை செய்யுமாறு விதைப் பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் க.விஜயா விடுத்துள்ள செய்திகுறிப்பில் தெரிவித்துள்ளார்.

நெல் பயிர் செய்வதற்கு முன் பசுந்தாள் பயிர்களான சணப்பை மற்றும் தக்கைப்பூண்டு ஆகியவற்றில் ஏதாவது ஒன்றினை விதைத்து மடக்கி உழுது பின் நெல் நடவு செய்வது பாரம்பரிய முறைப்படி கடைபிடிக்கும் இயற்கை உரமிடும் முறையாகும்.

**பசுந்தாள் பயிர்களின் தரம் :** பசுந்தாள் பயிர்களின் விதைகள் பொதுவாக விவசாயிகளிடமிருந்தும், விதை உற்பத்தியாளர்களிடமிருந்தும் பெறப்பட்டு விதை விற்பனையாளர்கள் மூலம் மீண்டும் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. மேலும் இத்தகைய பயிர்களின் விதைகள் சான்றளிப்புக்கு உட்படாமல் நேரடியாக கொள்முதல் செய்யப்படுவதால், பகுப்பாய்வு செய்தபின் விற்பனை செய்வது மிக அவசியமாகும். நடப்பு பருவத்திற்கு விற்பனை செய்யப்படும் பசுந்தாள் பயிர்களின் விதைகள் குறைந்தபட்சம் 98% சுத்தத்தன்மையும் 80% மற்றும் 75% முளைப்புத்திறன் முறையே சணப்பு மற்றும் தக்கைபூண்டு பெற்றிருக்க வேண்டும். எனவே, விதை விற்பனையாளர்கள் ஒவ்வொரு பசுந்தாள் பயிர் விதைக் குவியலும் பகுப்பாய்வு செய்து குறைந்தபட்ச முளைப்புத்திறன் மற்றும் சுத்தத்தன்மையில் தேறியுள்ளதா என்பதை தெரிந்து பின்னர் விற்பனை செய்யுங்கள்.

**பகுப்பாய்வு செய்வது எப்படி?** முளைப்புத்திறன் பகுப்பாய்வு செய்ய, விதை விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகள் தங்களிடம் உள்ள பசுந்தாள் பயிர் விதைக்குவியலில் இருந்து சணப்பை விதையாக இருப்பின் 100 கிராம், தக்கைப்பூண்டு விதையாக இருப்பின் 50 கிராம் எடுத்து விண்ணப்பக் கடிதத்துடன் ஒரு மாதிரிக்கு ரூ.80/- வீதம் பரிசோதனை கட்டணம் செலுத்தி 97, பிருந்தாவன் நகர், பெண்ணை கார்டன், 50 அடி ரோடு, கோண்டூர் போஸ்ட், உண்ணாமலை செட்டிசாவடி, கடலூர் - 607 006 என்ற முகவரியில் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் விதைப் பரிசோதனை நிலையத்தில் விதை பகுப்பாய்வு செய்து முடிவினை தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு செய்திகுறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# நெல் பயிரிட்ட விவசாயிகளுக்கு ஓர் முக்கிய அறிவிப்பு



ஈரோடு, பிப்.9

ஈரோடு மாவட்டம், தூக்கநாயக்கன் பாளையம் வட்டாரத்திற்கு உட்பட்ட அரக்கன் கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனப் பகுதிகளில் நடப்பு பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல் வயல்களில் தூக்கநாயக்கன்பாளையம் வேளாண்மை உதவி இயக்குநர் கோ.அமுதா ஆய்வு செய்தார்.

அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனப்பகுதி நெற் பயிர்களில் தற்சமயம் குலைநோய் (Blast) அறிகுறிகள் காணப் பட்டது. எனவே விவசாயிகள் குலைநோயை கட்டுப்படுத்த கீழ்க் கண்ட இரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன் படுத்தி பயன்பெறுமாறு கேட்டுக்கொண்டார்.

### நெல் குலைநோய் (Blast)

நெல்லில் ஏற்படும் ஒரு பொதுவான பூஞ்சை நோய் ஆகும். இது நெற்பயிரில் அனைத்து நிலைகளிலும் காணப்படும்.

### அறிகுறிகள்

பைரிகுல்லேரியா ஒரைசே எனும் பூஞ்சையானது இலைகளில் புண்கள் சிறிய நீரில் நனைந்த நீல பச்சை நிற புள்ளிகளாக தொடங்கி விரைவில் பெரியதாகி சாம்பல் நிற மையம் மற்றும் அடர் பழுப்பு நிற விழிம்புடன் கண்வடிவ புள்ளிகளை உருவாக்கு கின்றன. நோய் பரவல் அதிகமாகும் போது நீலமான புள்ளிகள் ஒன்றாக இணைந்து இலைகளின் பெரிய பகுதிகள் காய்ந்து வாடிவிடும். கடுமையாக பாதிக்கப்பட்ட நாற்றங்கால் மற்றும் வயலில் எரிந்த தோற்றம் காணப்படும். பின்னர் முனை வெடிப்பு மற்றும் கழுத்து கண் வெடிப்பு ஏற்படுகிறது. வெடிப்பு நோயால் பாதிக்கப்பட்ட தானியங்கள் பழுப்பு நிறமாக மாறும். தானியங் களில் கரும் புள்ளிகள் உருவாகி தானியத்தை பாதிக்கிறது.

பொதுவாக டிசம்பர் மற்றும் ஜனவரி போன்ற குளிர் கால மாதங்களில் இந்நோய் பரவலாக ஏற்படும். அதிகப்படியான நைட்ரஜன் உரங்களை பயன்படுத்துதல், அவ்வப்போது பெய்யும் தூரல், மேகமூட்டமான வானிலை, அதிக ஈரப்பதம், நீண்ட பனிகாலம் ஆகியவை நோய்க்கு உகந்த சூழலை உருவாக்குகிறது.

### குலைநோய் (Blast) மருந்துகள்

சூடோமோனஸ் ப்ளோரோசன்ஸ் 2.5 கிலோ/எக்டர் அல்லது டிரைசைக்ளோசோல் மற்றும் மேங்கோசெப்-400 கிராம்/ஏக்கர் அல்லது அசாக்ஸி ஸ்டோரோபின்- 200 மில்லி/ஏக்கர். இவைகளில் ஏதாவது ஒன்றை வாங்கி ஏக்கருக்கு 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கலாம்.

இந்த ஆய்வில் வேளாண்மை அலுவலர் ஆனந்தி, துணை வேளாண்மை அலுவலர் பழனிச்சாமி, உதவி வேளாண்மை அலுவலர்கள் தடப்பள்ளி-அரக்கன்கோட்டை பாசன சபை நிர்வாகிகள் மற்றும் விவசாயிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

# உழவன் செயலி குறித்து விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்

நாமக்கல்,பிப்.9



பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவர்கள் கிராமப்புற அனுபவ பயிற்சியின் கீழ் நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி வட்டாரம், தேவராயபுரம் கிராமத்தில் உழவன் செயலி பயன்படுத்தும் முறை பற்றி விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். உழவன் செயலி என்பது தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறையால் விவசாயிகளுக்காக உருவாக்கப்பட்ட ஒரு மொபைல் செயலியாகும். இந்த செயலி மூலம் விதை, உரம் மற்றும் பூச்சி மருந்துகளின் கிடைப்புத் தகவல், பயிர் பாதுகாப்பு ஆலோசனைகள், மாவட்டம் மற்றும் வட்டார அளவிலான வானிலை முன்னறிவிப்பு, சந்தை விலை விவரங்கள், அரசு மானியத் திட்டங்கள், பயிர் காப்பீடு மற்றும் கடன் தொடர்பான தகவல்கள் ஆகியவற்றை விவசாயிகள் எளிதாக பெறலாம்.

மேலும் மண் பரிசோதனை சேவைகள், வேளாண்மை அலுவலர்களின் தொடர்பு விபரங்கள் மற்றும் திட்டங்களுக்கான விண்ணப்ப நிலை ஆகியனவும் இதில் வழங்கப்படுகின்றன. விவசாயிகள் தங்களது மொபைல் எண்ணை பயன்படுத்தி பதிவு செய்து, தங்கள் பகுதியைத் தேர்வு செய்வதன் மூலம் இந்த செயலியை எளிதாக பயன்படுத்தலாம். ஒரே செயலியில் பல்வேறு அரசு வேளாண்மை சேவைகள் கிடைப்பதால், உழவன் செயலி விவசாயிகளின் நேரத்தையும் செலவையும் மிச்சப்படுத்தி, உற்பத்தி மற்றும் வருமானத்தை உயர்த்த உதவுகிறது.



# வாழையில் கொத்து ஊட்டச்சத்து வழங்கும் முறையினை விளக்கிய வேளாண் கல்லூரி மாணவர்கள்



நாமக்கல், பிப்.9

நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டாரத்தில் நடைபெற்று வரும் கிராமப்புற வேளாண் பணியனுபவ (RAWE) திட்டத்தின் ஒரு பகுதியாக, பி.ஜி.பி. வேளாண் அறிவியல் கல்லூரி மாணவர்கள் வாழைப்பயிரில் மீன் அமினோ அமிலம் மற்றும் தண்ணீர் பயன்படுத்தி கொத்து ஊட்டச்சத்து வழங்கும் முறையை விளக்கக் காட்சியாக நடத்தினர்.

வாழையில் மொட்டு வெளிவந்த பின் உருவாகும் கொத்துக்கு தேவையான முக்கிய ஊட்டச்சத்துகளை நேரடியாக வழங்கும் நடைமுறையே கொத்து ஊட்டமாகும். இந்த முறையால் பழங்களின் வளர்ச்சி மேம்பட்டு, அளவு, எடை மற்றும் மொத்த மகசூல் அதிகரிக்கிறது. கடைசி 'கை' திறந்த பின் ஆண் மொட்டு (வாழைப்பூ) அகற்றப்பட்டு, மீன் அமினோ அமிலம் கலந்து தயாரிக்கப்பட்ட கரைசல் வெட்டுப்பகுதியில் ஊட்டப்படுகிறது. பின்னர் அந்த பகுதி பாலித்தீன் உறை அல்லது பையைப் பயன்படுத்தி மூடப்படுகிறது. இதனால் கரைசல் வீணாகாமல், வளர்ந்து வரும் பழங்களுக்கு நேரடியாகச் சென்று சேருகிறது.

இந்த முறையைப் பயன்படுத்துவதன் மூலம் பழங்களின் நீளமும் பருமனும் அதிகரிக்கிறது, கொத்து எடையும் மகசூலும் உயர்கிறது, பழங்களின் தரமும் ஒரே மாதிரித் தன்மையும் மேம்படுகிறது. மண்ணில் உரம் இடும் முறையுடன் ஒப்பிடுகையில் ஊட்டச்சத்து இழப்பு குறைவாக இருக்கும். மேலும், செலவுக் குறைவானதும் திறன் மிக்கதுமான ஊட்ட மேலாண்மை முறையாக இது விளங்குகிறது.

எளிதாக கடைப்பிடிக்கக்கூடிய இந்த கொத்து ஊட்ட முறை, வளர்ந்து வரும் பழங்களுக்கு நேரடி சத்தளிப்பை வழங்குவதால், அதிக மகசூலும் உயர்தரமான விளைபொருளும் பெற உதவுகிறது என மாணவர்கள் விளக்கினர்.

# நீமாஸ்திரா செய்முறை விளக்கமளித்த வேளாண்மை கல்லூரி மாணவிகள்



கரூர், பிப்.9

கரூர் மாவட்டம், வெண்ணைமலை வட்டம், மண்மங்கலம் கிராமத்தில் பிஜிபி வேளாண் அறிவியல் கல்லூரி மாணவிகள் நீமாஸ்திரா தயாரிப்பு மற்றும் பயன்பாடு குறித்த காட்சி விளக்கத்தை நடத்தினார். வேம்பின் சக்தியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் இயற்கை பூச்சி தடுப்பு திரவமான நீமாஸ்திரா, இலைத்துளை பூச்சி, சுருள் பூச்சி, வெள்ளை ஈ உள்ளிட்ட பூச்சிகளை கட்டுப்படுத்துவதில் எவ்வாறு செயல்படுகிறது என்பதை மாணவிகள் அறிவியல் அடிப்படையுடன் விவரித்தனர்.

இந்த காட்சி விளக்கத்தின் முக்கிய நோக்கம், பாரம்பரிய இயற்கை வேளாண் முறைகளில் முக்கிய பங்காற்றும் நீமாஸ்திராவின் தயாரிப்பு முறை, அதன் பயன்கள் மற்றும் விளைச்சல் பாதுகாப்பில் அதன் செயல்திறன் குறித்து விவசாயிகளுக்கு நேரடி அறிவை வழங்குவதாகவும். இதன் ஒரு பகுதியாக, விவசாயிகளின் முன்னிலையில் நீமாஸ்திரா தயாரிக்கும் முறையை செய்து காட்டினார்கள்.

அதில் வேப்பெண்ணெய் அல்லது வேப்பிலை, தண்ணீர், மாட்டுக் கோமியம், மாட்டுச் சாணம் ஆகியவற்றை சீரான அளவில் கலந்து 24 மணி நேரம் நன்றாக ஊறவைத்து பயன்படுத்த வேண்டும். தயாரிக்கப்பட்ட நீமாஸ்திராவை பயிர்களில் நேரடியாகத் தெளிப்பது அல்லது துளி தெளிப்பான் மூலம் பயன்படுத்துவது குறித்தும் மாணவிகள் விளக்கினர். மேலும், நீமாஸ்திரா பூச்சிகளின் உணவு உண்ணும் திறனைத் தடுத்து முட்டையிடும் திறனை குறைக்கிறது, தாவரங்களில் பாதுகாப்பு சுவரை உருவாக்குகிறது என்பதான அறிவியல் காரணங்களையும் எடுத்துரைத்தனர். இந்த காட்சி விளக்கத்தின் மூலம் மண்மங்கலம் கிராம விவசாயிகளுக்கு நீமாஸ்திரா பற்றிய நன்மைகளை எடுத்துரைத்தனர்.

# சுண்ணாம்புக் கரைசல் குறித்த செய்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்




நாமக்கல், பிப்9

நாமக்கல் மாவட்டம், பிஜிபி வேளாண் அறிவியல் கல்லூரி மாணவிகள், விவசாயிகளுக்காக சுண்ணாம்பு கரைசல் (Calcium Hydroxide / Lime Solution) தொடர்பான செய்முறை விளக்கத்தை செய்து காட்டினார்.

இந்த சுண்ணாம்பு , இயற்கை சார்ந்ததும் குறைந்த செலவில் தயாரிக்கக்கூடியதுமான பாரம்பரிய வேளாண் உள்ளீடாக இருந்து, பயிர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், மலர்ச்சியை ஊக்குவிக்கவும், பூச்சி மற்றும் நோய் தாக்குதல்களை கட்டுப்படுத்தவும் பயன்படுவதாக மாணவிகள் விளக்கினர். குறிப்பாக தோட்டக்கலை மற்றும் வேளாண் பயிர்களில் இதன் பயன்பாடு குறித்து விரிவாக எடுத்துரைத்தனர். மேலும், இந்த கரைசலை இலைகளின் மேற்பரப்பிலும் தண்டின் அருகிலும் தெளிப்பு முறையில் பயன்படுத்தலாம் என்றும், தெளிப்பிற்காக 10 லிட்டர் தண்ணீரில் 300-500 மில்லி சுண்ணாம்பு கரைசலை கலந்து பயன்படுத்துவது பரிந்துரைக்கப்படுவதாகவும் மாணவர்கள் தெரிவித்தனர். பாசன முறையில் பயன்படுத்தும் போது ஏக்கருக்கு 5 முதல் 10 லிட்டர் வரை இந்த கரைசலை பயன்படுத்தலாம் எனவும் விளக்கப்பட்டது. அதிகபட்ச பயனை பெறுவதற்காக, இந்த சுண்ணாம்பு கரைசலை அதிகாலை நேரங்களில் அல்லது மாலை நேரங்களில் பயன்படுத்துவது சிறந்தது என்றும், இதன் மூலம் தாவரங்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறைக்கப்படுவதுடன் செயல்திறன் அதிகரிக்கும் என்றும் தெரிவித்தனர்.

மேலும், சுண்ணாம்பு கரைசலை மோர் அல்லது வேம்பு சார்ந்த உயிரியல் கலவைகளுடன் இணைத்து பயன்படுத்தும் போது அதன் செயல்திறன் மேலும் மேம்படும் என்றும், இது சுற்றுச்சூழலுக்கு ஏற்ற நிலையான வேளாண்மையை ஊக்குவிக்கும் முறையாகும் என்றும் மாணவர்கள் எடுத்துரைத்தனர்.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற விவசாயிகள், குறைந்த செலவில் அதிக பயன் தரும் இந்த தொழில்நுட்பம் பயிர் உற்பத்தி மற்றும் பாதுகாப்பில் மிகவும் உதவியாக இருக்கும் என கருத்து தெரிவித்தனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# தேங்காய் மரம் ஏறும் கருவி குறித்த செயல் விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



சிவகங்கை, பிப்.9

சிவகங்கை மாவட்டம், எஸ்.புதூர் வட்டாரம், மேலவண்ணாரிருப்பு கிராமத்தில் 27.01.26 அன்று தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் (TNAU) உருவாக்கிய தேங்காய் மரம் ஏறும் கருவி குறித்த விரிவான செயல்விளக்க நிகழ்ச்சி வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சி விவசாயிகளின் தொழில்நுட்ப அறிவை மேம் படுத்தவும், தேங்காய் மரம் பராமரிப்பு பணிகளில் உள்ள சவால்களை குறைக்கவும் நோக்கமாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டது.

இச்செயல்விளக்க நிகழ்ச்சியில், TNAU தேங்காய் மர ஏறும் கருவியின் அமைப்பு, செயல்படும் முறை மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது. குறிப்பாக, தேங்காய் மரத்தில் பாதுகாப்பாகவும் எளிதாகவும் ஏறி காய்கறி வெட்டுதல், பூச்சி மேலாண்மை, உரம் இடுதல் மற்றும் தெளிப்பு போன்ற பணிகளை மேற்கொள்ள இந்த கருவி எவ்வாறு உதவுகிறது என்பதைக் குறித்து செய்முறையாக காண்பிக்கப்பட்டது.

மேலும், தேங்காய் மரம் ஏறும் கருவியின் பயன்பாட்டால் மனிதவள பற்றாக்குறை பிரச்சினை குறைவதுடன், நேரம் மற்றும் செலவினம் மிச்சப்படுவதாகவும், மரம் ஏறும் போது ஏற்படும் விபத்துகளின் அபாயம் கணிசமாக குறைக்கப்படுவதாகவும் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இதன் மூலம் தேங்காய் தோட்டங்களில் பராமரிப்பு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள முடியும் என்பதும் வலியுறுத்தப்பட்டது.



# சோப்புக் கரைசல் பயன்பாடு குறித்த செய்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், பிப்.9

நாமக்கல் மாவட்டம், பிஜிபி வேளாண் அறிவியல் கல்லூரி மாணவிகள், விவசாயிகள் மற்றும் வீட்டுத்தோட்டம் வளர்ப்போருக்காக சோப்பு கரைசல் (Soap Solution) பயன்பாடு குறித்த செய்முறை விளக்கமளித்தனர். இந்த சோப்பு கரைசல், குறைந்த செலவில் தயாரிக்கக்கூடிய இயற்கை சார்ந்த பூச்சிக் கொல்லியாக இருந்து, அஃபிட்ஸ் (Aphids), மாவு பூச்சி (Mealy bugs), வெள்ளை ஈ (Whiteflies) போன்ற சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்துவதில் சிறப்பாக செயல்படுகிறது என மாணவிகள் விளக்கினர்.

மேலும், 1 லிட்டர் தண்ணீரில் சுமார் 10 முதல் 20 கிராம் வரை சோப்பு தூள் அல்லது திரவ சோப்பை கலந்து இந்த கரைசலை தயாரிக்கலாம் என்றும், இது பூச்சிகளின் உடல் மேற்பரப்பை மூடி மூச்சுத் தடை ஏற்படுத்துவதன் மூலம் நேரடி தொடர்பில் பூச்சிகளை அழிக்கும் முறையில் செயல்படுகிறது என்றும் எடுத்துரைத்தனர். இந்த செய்முறை விளக்க நிகழ்ச்சி, சுற்றுச்சூழலுக்கு ஏற்றதும் பாதுகாப்பானதுமான உயிரியல் பூச்சி மேலாண்மை முறைகளை விவசாயிகளிடம் பரப்பும் நோக்கில் நடத்தப்பட்டது. இதில் பங்கேற்றவர்கள், எளிதில் தயாரிக்கக் கூடிய இந்த முறைகள் பயிர் பாதுகாப்பிற்கு மிகவும் பயனுள்ளதாக இருப்பதாக கருத்து தெரிவித்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# உலக ஈர நிலங்கள் தினம் : IFS மாதிரி மூலம் நிலையான ஈர நில விவசாயம்



கடலூர், பிப்.9

கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் அமைந்துள்ள அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் வேளாண் புலத்தில் பயிலும் இறுதியாண்டு இளநிலை வேளாண்மை மாணவிகள் RAWE ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் குமராட்சி கிராமத்தில் தங்கி பயின்று வருகின்றார்கள்.

IFS மாதிரி காட்சிப்படுத்தல் மூலம் ஈரநில பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு உலக ஈர நிலங்கள் தினத்தை முன்னிட்டு, ஈர நிலங் களின் முக்கியத்துவம் மற்றும் நிலையான விவசாய முறைகள் குறித்து விளக்கும் வகையில் Integrated Farming System (IFS) அடிப்படையிலான கைவினை மாதிரி ஒன்று உருவாக்கப்பட்டு பொதுமக்கள் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட்டது.

இந்த IFS மாதிரியில் நெல் (Paddy), மீன் வளர்ப்பு (Fish) மற்றும் கோழி வளர்ப்பு (Poultry) ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு, ஈர நிலங்களில் செயல்படுத்தக்கூடிய நிலையான மற்றும் சுற்றுச்சூழல் நட்பு விவசாய முறை தெளிவாக விளக்கப்பட்டது.

ஒரே நிலப்பரப்பில் பல்வேறு உற்பத்தி முறைகளை இணைப்பதன் மூலம் விவசாயிகளுக்கு அதிக வருமானம் கிடைப்பதுடன், இயற்கை வளங்கள் பாதுகாக்கப்படுவதும் சாத்தியமாகிறது என்பதையும் இந்த மாதிரி எடுத்துரைத்தது. இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி G2 பிரிவு மாணவிகளால் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு, பார்வையாளர் களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

நிகழ்ச்சியை மு.பா.அபிவருண்யா, செ.அபிதா, ச.அபிராம சுந்தரி, சி.அஜிதா, சா.வெ.அகல்யா, ச.அகிலாண்டேஸ்வரி, ஆ.அக்ஷயா, தி.அட்சயா, ரா. ரெ.அக்ஷய லெக்ஷ்மி, ஜெ.சா.அஞ்சுப்பார்க்கவி, செ. அனிதா மற்றும் த.அனுப்பிரியா ஆகிய மாணவிகள் ஒருங் கிணைந்து முனைவர் வெற்றிச்செல்வன் வேளாண் விரிவாக்க துறை பேராசிரியர் அவர்களின் தலைமையில் சிறப்பாக நடத்தினர். இந்த நிகழ்ச்சி, ஈரநில பாதுகாப்பின் அவசியத்தையும், IFS போன்ற ஒருங்கிணைந்த விவசாய முறைகள் எதிர்கால விவசாயத் திற்கு அளிக்கும் பங்களிப்பையும் வலியுறுத்தும் ஒரு முக்கிய முயற்சியாக அமைந்தது.

# தென்னை சாகுபடியில் இளம் குரும்பை உதிர்வதைத் தடுக்க எருக்கு தழைப்போர்வை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், பிப்.9

நாமக்கல் பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரியில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகள் தங்களது இறுதி ஆண்டு பாடத் திட்டமான கிராமத்தில் தங்கி வேளாண் பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ் தென்னை சாகுபடியில் இளம் குரும்பை உதிர்வதைத் தடுக்க எருக்கு தழைப்போர்வை குறித்து எடுத்துரைத்தனர்.

தென்னை மரங்களில் போரான் சத்து குறைபாட்டினால் ஏற்படும் இளம் குரும்பை உதிர்வதைத் தடுக்க ‘எருக்கு தழைப்போர்வை’ (Mulching) பெரிதும் உதவுகிறது. எருக்கு இலைகளைத் தென்னையைச் சுற்றி இடுவதன் மூலம் மண்ணிற்குத் தேவையான நுண்ஊட்டச்சத்துக்கள் கிடைப்பதுடன், இது ஒரு சிறந்த பூச்சி விரட்டியாகவும் செயல்படுகிறது. மேலும், தென்னை மரத்திற்குத் தேவையான பல்வேறு ஊட்டச்சத்துக்களை இது இயற்கையான முறையில் வழங்குகிறது.

**முக்கியப் பயன்கள்**

**குரும்பை உதிர்வு தடுப்பு**

போரான் குறைபாட்டை நீக்கி, காய்கள் முதிர்வதற்கு முன்பே விழுவதைக் குறைக்கிறது.

**பூச்சி விரட்டி**

இதிலுள்ள பால் போன்ற திரவம் மற்றும் வாசனை இயற்கை பூச்சி விரட்டியாகச் செயல்பட்டு மரத்தைத் தாக்குதலில் இருந்து பாதுகாக்கிறது.

**ஊட்டச்சத்து மேலாண்மை**

மட்கும் போது மண்ணிற்குத் தேவையான தழைச்சத்து மற்றும் பிற சத்துக்களை வழங்குகிறது.

# பால் பண்ணையை பார்வையிட்ட வேளாண் கல்லூரி மாணவர்கள்



சேலம், பிப்.9

சேலம் மாவட்டம், பணமரத்துப்பட்டி வட்டாரத்தைச் சேர்ந்த மாணவர்கள் / பயிற்சியாளர்கள் ஆவின் பால் பண்ணை (Aavin Dairy) யை பார்வை யிட்டனர். இந்நிகழ்வில் ஆவின் பால் பண்ணை மேலாளர் வீரகுமார் வகுப்பு எடுத்துத் தகவல்கள் வழங்கினார்.

சேலம் ஆவின் பால் பண்ணை 1978ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இங்கு தினசரி சுமார் 6.5 லட்சம் லிட்டர் பால் பல்வேறு பகுதிகளில் இருந்து பெறப்படுகிறது. பெறப்படும் பால், நவீன தொழில்நுட்ப முறைகளில் செயலாக்கப்பட்டு பால் பொடி, நெய், வெண்ணெய், ஐஸ்கிரீம், மில்க்ஷேக், பால் கேக், தயிர், டெட்ரா பேக் பால் உள்ளிட்ட பல்வேறு பால் பொருட்களாக மாற்றப்படுகிறது. மேலும், பால் உற்பத்தியாளர்களான விவசாயிகளை ஆதரிக்கும் வகையில் மிருக மருத்துவ சேவைகள், தீவன வசதிகள் போன்ற பல்வேறு உதவி களையும் ஆவின் நிறுவனம் வழங்கி வருகிறது.

பார்வையின் போது, பால் சாசேட் (Milk Sachet) பேக்கிங் பிரிவு, லோடிங் பே 1 முதல் 6 வரை ஆகியவற்றை மாணவர்கள் பார்வை யிட்டனர். ஒரே நாளில் சுமார் 9 லட்சம் பால் பாக்கெட்டுகள் இங்கு தயாரிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. மேலும், டிஸ்பேட்ச் சில்லர் யூனிட் (மணிக்கு 20,000 லிட்டர் திறன்) பற்றியும் விளக்கமளிக்கப் பட்டது. அதேபோல், 5000 லிட்டர் திறன் கொண்ட வெண்ணெய் சறுக்கு இயந்திரம் (Butter Churn), நெய் தயாரிப்பு மற்றும் பேக்கிங் பிரிவு, முழுமையாக தானியங்கி முறையில் செயல்படும் நெய் செய லாக்க அமைப்புகள், 2000 லிட்டர் திறன் கொண்ட நெய் கொதி குகலன் (1 முதல் 3 யூனிட்), மணிக்கு 2000 லிட்டர் திறன் கொண்ட நெய் கிளாரிஃபையர் (1 & 2), நெய் செட்டிலிங் டேங்க், நிரப்பு இயந்திரம் மற்றும் பேக்கிங் பிரிவு ஆகியன பார்வையிடப்பட்டன.

மேலும், பால் பொடி உற்பத்தி நிலையம் (ஒரு நாளுக்கு 10 மெட்ரிக் டன் திறன்), எவாப்பரேட்டர் யூனிட் (மணிக்கு 5000 லிட்டர்), 5000 மற்றும் 10,000 லிட்டர் திறன் கொண்ட கிரீம் டேங்க்கள், ADS - அசெப்டிக் பேக்கேஜிங் ஸ்டேன் ஆகியன குறித்தும் விளக்க மளிக்கப்பட்டது. டெட்ரா UHT ஸ்டாண்டர்டைஸ்டு ஹோமோஜ னைஸ்டு பால் 6 மாதங்கள் கெடாமல் பாதுகாக்கப்படும் தொழில்

நுட்பம் குறித்தும் மாணவர்கள் அறிந்தனர். மேலும், கண்ட்ரோல் சாம்பிள் ரூம், மொபைல் பல்க் மில்க் கூலர் ஆகியனவும் பார்வையிடப்பட்டன. சேலம் ஆவின் பால் பண்ணையிலிருந்து தினசரி சுமார் 1.5 லட்சம் லிட்டர் பால் சென்னை நகரத்திற்கு அனுப்பப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் பார்வை பயணம் மூலம் மாணவர்கள் பால் செயலாக்கம் மற்றும் நவீன தொழில்நுட்ப பயன்பாடு குறித்து பயனுள்ள அனுபவங்களை பெற்றனர்.

## கிராமப்புற விவசாயிகளுக்கு நடமாடும் கால்நடை மருத்துவ சேவைகளை வழங்கிய வேளாண் மாணவர்கள்

நாமக்கல், பிப்.9

நாமக்கல் மாவட்டம், பிஜிபி வேளாண் கல்லூரியின் இறுதி ஆண்டு மாணவர்கள், தங்களது களப்பயிற்சியின் ஒரு பகுதியாக எலச்சிப்பாளையம் வட்டாரத்தில் கிராமப்புற விவசாயிகளுக்கான கால்நடை மருத்துவ சேவையை வழங்கினர்.



இந்த சேவை, நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தி மூலம் மேற்கொள்ளப்பட்டு, கிராமங்களில் உள்ள விவசாயிகள் நேரடியாக பயன் பெறும் வகையில் அமைந்தது. நிகழ்வில் கால்நடை மருத்துவர் அருணா, உதவி கால்நடை மருத்துவர் அமுதன் கலந்து கொண்டு மாடுகளுக்கு சினை ஊசி, குடற்புழு நீக்க மாத்திரைகள், தடுப்பூசிகள் உள்ளிட்ட அடிப்படை மருத்துவ சேவைகளை வழங்கினர்.

மேலும், கால்நடைகளின் ஆரோக்கிய பராமரிப்பு முறைகள், நோய் தடுப்பு நடவடிக்கைகள், சரியான ஊட்டச்சத்து மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு விரிவான விளக்கங்கள் அளிக்கப் பட்டன.

இந்த முயற்சியின் மூலம் கிராமப்புற விவசாயிகள் கால் நடை பராமரிப்பு குறித்த விழிப்புணர்வைப் பெற்று, தங்கள் வாழ்வா தாரத்தை மேம்படுத்தும் வகையில் பெரிதும் பயனடைந்தனர்.

வேளாண் கல்லூரி மாணவர்களின் இந்த சேவை சமூக பொறுப்புணர்வின் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்தது.